நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –5 அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை. டாக்டர் ப.செந்தில்குமார், இ.ஆ.ப.,

ooOoo

<u>ந.க.எண்.7120/2009/எப்1</u> <u>நாள். 27 .11.2009.</u>

பொருள். பணிக் குழு – தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணிகள் – உதவி செயற்பொறியாளர்கள் – பேரூராட்சிகளின் நிர்வாகத்தில் அயற்பணி அடிப்படையில் பணிபுரிய பணியிட மாறுதல் செய்தல் –சம்பந்தமாக.

படிக்கப் பட்டவை.

1. அரசாணை (நிலை) எண்.214, நநி மற்றும் குவ துறை, நாள்.9.11.2009.
2. இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்ககம், கடித எண்.ந.க.21813/2009/அ2 நாள்.19.11.2009.
3. உதவி செயற்பொறியாளர்கள் / நகராட்சி பொறியாளர் நிலை–2 பெறப்பட்ட பணி மாறுதல் கோரும் விண்ணப்பங்கள்.

ooOoo

<u>ஆணை.</u>

தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணி விதி 31 (சி), விதிகள் 1970 ன் கீழ் நிர்வாக நலன் கருதி, கீழ்க்கண்ட நகராட்சி பொறியாளர்களை அயற்பணி அடிப்படையில் பேரூராட்சிகளின் நிர்வாகத்தில் பணியிட மாறுதல் செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ. எண். | நகராட்சி பொறியாளர் பெயர் (திருவாளர்கள்) | தற்போது பணிபுரியும் நகராட்சி / இடம் மற்றும் பதவி | அயற்பணி அடிப்படையில் மாறுதல் செய்யப்படும் இடம் மற்றும் பதவி |
|---|---|---|---|
| 1. | ஒய்.சுரேந்திரன் | உதவி செயற்பொறியாளர், மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், வேலூர். | பேரூராட்சிகளின் நிர்வாகம், உதவி செயற்பொறியாளர் |
| 2. | கே.ஆர்.எஸ்.கருப்பையா | நகராட்சி பொறியாளர் நிலை–2 காஞ்சிபுரம் நகராட்சி | பேரூராட்சிகளின் நிர்வாகம், உதவி செயற்பொறியாளர். |

2) சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர் / மண்டல இயக்குநர் மேற்கண்ட பொறியாளர்களை பணியிலிருந்து உடனடியாக விடுக்குமாறும், விடுவித்த நாளினை இவ்வலுவலகத்திற்கு உடன் தெரிவிக்குமாறு கோரப்படுகிறது.

3) பேரூராட்சி இயக்குநர் மேற்கண்ட உதவி செயற்பொறியாளர்களுக்கு பணியிடம் வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4) மேற்கண்ட உதவி செயற்பொறியாளர்களின் விருப்பத்தின் பேரில் இம்மாறுதல் செய்யப்படுவதால், அவர்கள் பயணப்படி பெற தகுதியற்றவராகிறார்கள்.

5) அயற்பணி அடிப்படையில் பணிபுரிவதற்கான வழிமுறைகளும் வரையறைகளும் (Terms and Conditions) தனியே வழங்கப்படும்.

6) இச்செயல்முறை உத்தரவினை பெற்றுக் கொண்டமைக்கான ஏற்பளிப்பினை உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/– ப.செந்தில்குமார்,
நகராட்சி நிர்வாக இயக்குநர்

1. திரு ஒய்.சுரேந்திரன்,
உதவி செயற்பொறியாளர்,
மண்டல நகராட்சி நிர்வாக இயக்ககம்,
வேலூர் — மண்டல இயக்குநர் மூலமாக

2. திரு கே.ஆர்.எஸ்.கருப்பையா,
நகராட்சி பொறியாளர் நிலை–2
காஞ்சிபுரம் நகராட்சி. — நகராட்சி ஆணையர் மூலமாக

நகல்.
இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்ககம், சென்னை.600 108.
நகராட்சி ஆணையர், காஞ்சிபுரம்
மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், செங்கல்பட்டு / வேலூர்.
தலைமை பொறியாளர் / கூடுதல் இயக்குநர் மேசைக்கு
இவ்வலுவலக வலைதளத்தில் பதிவு செய்ய

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

தே.நி.கண்காணிப்பாளர்.

27/11/05